# ஸ்லிங் பேக்




## இந்த வீடியோ-லே, ட்ரெண்டி ஸ்லிங் பேக்-செய்யறதைப்பத்தி கத்துக்கலாம்.



உங்க கிட்டே பிரமாதமான அவுட்ஃபிட்- இருக்கு, அதை நீங்க போட்டுக்கணும்-னு ஆசைப்படறீங்க. ஆனா,அதுக்கு மேட்ச்-ஆ, பேக்- இல்லையா ? எங்க கிட்டே,சொல்யூஷன்- இருக்கு.உங்க அவுட்ஃபிட் -க்கு, மேட்ச் -ஆ, காம்ப்ளிமெண்ட்-ஆ, இருக்கற,ஒண்ணை, நீங்களே செய்தா என்ன ?

எடுத்துகிட்டு போறது, ஃபன்-ஆ, இருக்கும். ப்ரெண்ட்ஸ்- கூட வெளியிலே பார்ட்டிக்கு போகும் போது,உங்களுக்கு வேண்டிய சின்னசின்ன பொருட்களை எடுத்துகிட்டு போறதுக்கு, நல்லா இருக்கும்.

இந்த பேக்- செய்ய உங்களுக்கு வேண்டியது, 23-க்கு, 13- அங்குல அளவிலே, உங்களுக்கு விருப்பமான துணி,நாங்க இங்கே, ஒரே சீரான அலைகள் மாதிரி இருக்கிற நல்ல அழகான ப்ரைட் பீஸ்- ஐ, எடுத்திருக்கோம்.அதே அளவுள்ள ஃப்யூஸிங்- துணி,அப்புறம், லைனிங்- துணி, ஒரு, மார்க்கர்.2 ½ அங்குல நீளம் இருக்கிற, ரெண்டு சின்ன துண்டு துணி.பர்ஸ்-ஐ மூடறதுக்கு,ஒரு, மாக்னெடிக் பட்டன் அட்டாச்- பண்றதுக்கு, ஒரு செயின்,உங்களுக்கு சௌகரியமான நீளத்திலே இருக்கணும்-ங்கறதை பார்த்துக்கங்க. அப்புறம் ஒரு, சீம் ரிப்பர், கத்தரிக்கோல்,சில பின்-கள், அயர்ன்.

முதல் ஸ்டெப். ஸ்லிங் பேக்-க்கான ட்ராஃப்ட்-ஐ, எங்க வெப்சைட்,-ushasew.com-லே இருந்து, டவுன்லோட்- பண்ணிக்கங்க. இப்போ உங்க கிட்டே ட்ராஃப்ட் - இருக்கு, இனி ஆரம்பிக்கலாம். ஃப்யூஸிங் -துணியுடைய,பளபளப்பான பக்கம், ப்ரிண்டட்- துணியுடைய ராங் சைட் ஐ, ஃபேஸ்-பண்ண மாதிரி இருக்கணும்.கீழே இருக்கிற ஃப்யூஸிங் துணியோட சேர்த்து, ப்ரிண்டட் - துணி மேலே, அயர்ன்- பண்ணுங்க .துணி ரெண்டும் சேர்ந்துடுச்சுன்னா, லைனிங்- துணிமேலே அதை வையுங்க, ப்ரிண்டட் - துணி, உங்களைப் பார்த்த மாதிரி இருக்கணும்.
















ட்ராஃப்ட் -ஐ எடுத்து, துணி மேலே வையுங்க.பின் பண்ணுங்க. மார்க்கர்- உதவியாலே, ட்ராஃப்ட் அவுட் லைன்-ஐ, துணி மேலே வரைஞ்சுக்கங்க. துணி, ட்ராஃப்ட் - னுடைய ஷேப் -லேயே வர்ரதுக்கு, மார்க்- பண்ண, கோடு மேலே, கவனமா, துல்லியமா கட்- பண்ணுங்க.

ட்ராஃப்ட் - மேலே ரெண்டு பாயிண்ட்ஸ்- இருக்கறதை பாருங்க,- இங்கே, இங்கே.அது மாக்னெடிக் பட்டன்- னுடைய ரெண்டு பார்ட்ஸ்.ரெண்டு பாயின்ட்-ஐயும், துணியினுடைய டாப் லேயர்-லே, மார்க்- பண்ணுங்க.


பின்-களை ஒவ்வொண்ணா எடுத்துடுங்க.லைனிங் துணி மேலே ட்ராஃப்ட் -ஐ வெச்சு,ரெண்டு, மாக்னெடிக் பட்டன் பாயிண்ட்ஸ் -ஐ, மார்க்- பண்ணுங்க. மாக்னெடிக் பட்டன் -ஐ,லைனிங் துணி மேலே, இந்த மாதிரி வையுங்க.அப்படியே பிடிச்சுகிட்டு,அதனுடைய ப்ராங்ஸ்-க்கு அலைன்- பண்ற மாதிரி மார்க் - பண்ணுங்க.இப்போ, மூலையிலே இருந்து 1.5 அங்குல தூரத்திலே, மார்க்ஸ் -க்கு அலைன் - பண்ற மாதிரி, ரெண்டு சின்ன கோடுகளைப் போடுங்க.

சீம் ரிப்பர்- உதவியாலே, மார்க் - பண்ண கோடுகள் மேலே கால் அங்குலத்துக்கு, கீறி விடுங்க. மாக்னெடிக் பட்டன் - னுடைய ப்ராங்ஸ் -ஐ, அந்த பிளவுக்குள்ளே நுழையுங்க.பின்பக்கத்திலே, ப்ராங்ஸ் - மேலே பட்டன் ரிங்- ஐ,வெச்சு, ப்ராங்ஸ் -ஐ, விரிச்சு தட்டைக்கி விடுங்க. இது, மாக்னெடிக் பட்டன் - னுடைய ஒரு பகுதி.இனி இன்னொரு பகுதியை எப்படி வைக்கறதுன்னு பார்க்கலாம்.

மாக்னெடிக் பட்டன் - னுடைய இன்னொரு பகுதியை, பிரிண்டட் அண்ட் ஃப்யூஸிங் துணி க்கு மேலே,முன்னே, மார்க் பண்ண இடத்திலே, ஃபிக்ஸ்- பண்ணனும். பட்டன்- னுடைய,ரெண்டு ப்ராங்ஸ் -ஐயும் மார்க் பண்ணி, ரெண்டு பிளவுகள் உண்டாக்கறதுக்கு, அதே மாதிரி கோடுகள் போடுங்க.மீதி இருக்கிற லைனிங்- துணியிலே ஒரு சின்ன சதுரம் வெட்டிக்கங்க.அதை,துணிக்கு, கீழே,ரெண்டு பிளவுகள் வர்ர இடத்திலே, பின்னாலே இருக்கிற மாதிரி,வையுங்க. சீம் ரிப்பர்-னாலே,ரெண்டு பிளவுகளை உண்டாக்குங்க.சதுர துணியையும், பின் பண்ணிக்கலாம்.

பிளவுகளுக்குள்ளே, ப்ராங்ஸ் -ஐ நுழையுங்க, அதுக்குள்ளே ரிங்க்-ஐ வையுங்க.கீழே லைனிங் - துணி இருக்கும். பட்டன் பீஸ் - அதனோட இடத்திலே இருக்கறதுக்கு, ப்ராங்ஸ் -ஐ தட்டையாக்கி விடுங்க.

பட்டனை, செக்யூர்ட்-ஆ, வைக்கறதுக்கு, லைனிங் - துணி, உதவியா இருக்கும். இனி, எக்ஸ்ட்ரா லைனிங் - துணியை, வெட்டிடலாம்.







அடுத்து, லைனிங் - துணியை, பிரிண்டட்-
துணிமேலே வைக்கணும்,ரெண்டு துணியோட
ரைட் சைட்ஸ்- ஒண்ணை ஒண்ணு பார்த்த
மாதிரி இருக்கணும்.அதை பின் -
பண்ணிடுங்க.துணியோட கீழ்ப்பகுதியிலே, 4-
அங்குல இடைவெளியிலே, ரெண்டு
பாயிண்ட்ஸ்-ஐ, மார்க் பண்ணுங்க. இது,
தைக்கற பாயிண்ட்ஸ் . ஒரு, பாயிண்ட் -லே
இருந்து தைக்க ஆரம்பிச்சு, சுத்தி
கொண்டுபோய்,மார்க் பண்ண இன்னொரு
பாயிண்ட் -லே, தையலை முடிக்கணும்.அந்த
ஓப்பனிங்-, நாம தைச்சு முடிச்ச
பிறகு,துணியோட ரைட் சைட்-ஐ, வெளியிலே
கொண்டு வர்ரதுக்கு, உதவியா இருக்கும்.








இப்போ, ப்ரிபரேஷன்- முடிஞ்சது, பெருமூச்சு
விடுங்க.கடைசியா தைக்கறதுக்கான நேரம்
வந்தாச்சு.
ஸ்ட்ரெயிட் ஸ்டிச் -க்காக, ஸ்டிச் பேட்டர்ன்
செலெக்டரை
, A- லேயும், ஸ்டிச் லென்த் -ஐ, 2.5- லேயும், செட்-
பண்ணுங்க.தைக்க ஆரம்பியுங்க முதல்லேயும்,
கடைசியிலேயும், லாக் ஸ்டிச் - போட
மறக்காதீங்க. ஓரங்களைத்திருப்பும் போது,ஊசி
முனை துணியிலே இருக்கிற மாதிரி
பார்த்துக்கங்க.தைக்கும் போது,

பின்- களை எடுக்க மறந்துடாதீங்க.

தைச்சு முடிச்ச பிறகு, நூலை கட் பண்ணிடுங்க.
இப்போ ரெண்டு துண்டும் சேர்ந்திருக்கு.நல்ல
நீட் -ஆ கொடுக்கறதுக்கு, எல்லா
பக்கங்கள்-லேயும், சிக் சாக் ஸ்டிச்- போடலாம்.
சிக் சாக்
க்காக, ஸ்டிச் பேட்டர்ன் செலெக்டரை
, C- க்கு திருப்புங்க, ஸ்டிச் லென்த் -ஐ, 1.5- லே
செட் - பண்ணுங்க. ஓரங்கள்-லே, ஸ்ட்ரெயிட்
ஸ்டிச்-ஐ தொடர்ந்து,
சிக் சாக் ஸ்டிச் - னாலே, பக்கங்களைத்
தைக்கலாம்.



எக்ஸ்ட்ரா த்ரெட்-ஐ கட் -பண்ண பிறகு,நீங்க
விட்டிருந்த இடைவெளி வழியா,பையினுடைய
ரைட் சைட்-ஐ, வெளிப்புறமா திருப்புங்க.
அதை எப்படி செய்யறதுன்னு,
பாருங்க.மூலைகளை, வெளிப்புறமா கொண்டு
வரும் போது,கவனமா செய்யுங்க.அது, ப்ராப்பர்
ஷேப்-லே வருதான்னு,
உறுதிபடுத்திக்கங்க.மூலைகளை , வெளியிலே
இழுக்கறதுக்கு, சீம் ரிப்பர்-ஐ, யூஸ்- பண்ணலாம்.
இன்னொரு சுலபமான வழி, , வுடன் சாப்ஸ்டிக்
-ஐ,யூஸ்- பண்ணி கூட மூலைகளை வெளியிலே
கொண்டுவரலாம்,




நல்ல உறுதியான ஷேப்- வர்ரதுக்கு, அயர்ன்- பண்ணுங்க. ஓபன்-ஆ, இருந்த இடத்திலே,இந்த மாதிரி,ஓரங்களை மடிச்சு,பின் பண்ணுங்க. பேக்- னுடைய ஷேப்- கொண்டு வர்ரதுக்கு, துணியை ரெண்டா மடிச்சு, சென்டர்-லே, பின் பண்ணுங்க.

அடுத்ததா,பையினுடைய எல்லா பக்கங்களையும் தைக்கலாம்.
பக்கவாட்டு தையல் விளிம்புகளைத் தைக்கும் போது, ரெண்டு துண்டு, மேட்சிங்- துணியை மடிச்சுக்கணும்,அதை மடிச்சு தைச்சு ரெண்டு ஓரங்கள்-லேயும், உள்ளே, இந்த மாதிரி வைக்கணும். அதுசெயின் ஸ்லிங்-ஐ, ஹோல்ட்- பண்ணும்.

ஸ்ட்ரெயிட் ஸ்டிச் -க்காக, உங்க மெஷின் பேட்டர்ன் செலெக்டரை, A- லேயும், ஸ்டிச் லென்த்
-ஐ, 2.5- லேயும், செட்- பண்ணுங்க.பையை இப்படி வெச்சுகிட்டு,மேல் ஓரத்தை தைக்க ஆரம்பியுங்க.மேலே ஹரிஸான்டல் -ஆ, இருக்கிற ஓரத்தை மட்டும் தையுங்க.பின் பக்கத்தையும் சேர்த்து தைச்சிடாம பார்த்துக்கங்க.

மேல் ஓரத்தை தைச்சு முடிச்ச பிறகு,பக்கவாட்டு தையல் விளிம்புகளைத்
தைக்கலாம்.இங்கே,இந்த சின்ன - ஸ்ட்ரிப் ஐ,செயினுக்குள்ளே விடுங்க, ஸ்ட்ரிப் -ஐ மடிச்சு,ரெண்டு பக்கவாட்டு தையல் விளிம்புகளுக்கு நடுவிலே வையுங்க அந்த ஓரத்தை தையுங்க.ஆரம்பத்திலேயும் கடைசியிலேயும் ரிவர்ஸ் ஸ்டிச்- போட மறந்துடாதீங்க,உங்க ஸ்லிங் பேக்- னுடைய மூலையிலே இருந்து, உங்களுக்கு, ப்ரெஷியஸ்-ஆன, சின்ன சின்ன பொருட்கள், வெளியிலே விழுந்துடக்கூடாது.

ஸ்லிங் பேக் - னுடைய ஃப்ளாப்-ஐ தொடர்ந்து , அடுத்த பக்கத்தையும் தையுங்க.இன்னொரு ஸ்ட்ரிப்-ஐயும், செயினுக்குள்ளே நுழைக்கும் போது, செயின் ஸ்ட்ரெயிட்-ஆ, இருக்கான்னு,பார்த்துக்கங்க. ஸ்ட்ரிப் -ஐ, மடிச்சு,பக்கவாட்டு தையல் விளிம்புகளுக்கு இடையிலே வையுங்க.தொடர்ந்து, அந்த பக்கத்தை தையுங்க.

தைச்சு முடிச்ச பிறகு, எக்ஸ்ட்ரா- நூலை கட் பண்ணிடுங்க. பின்- ஐ,

ரிமூவ்- பண்ணிடுங்க. அழகான புரூச்- வெச்சு, உங்க பையை இன்னும் அழகுபடுத்தலாம்.

உங்க அழகான ஸ்லிங் பேக் - வெளியிலே கொண்டு போக தயாரா இருக்கு.அது ஃபன் -ஆ, இருந்தது, ரிசல்ட்- அதை விட ஃபன்-ஆ, இருக்கு., எங்களுடைய மற்ற பேக் டுடோரியல்-ஐ பாருங்க. இன்னும் பலவகையான பேக்ஸ்- ஐ உருவாக்குங்க.அது, சந்தோஷம் கொடுக்கும்.